







## உறுதிமொழி பத்திரத்தில் கையெழுத்திட்டார்

# எடப்பாடி பழனிசாமி கண் தானம்

## கண் தானம் செய்வோருக்கு புதிய இணையதளத்தை துவக்கிவைத்தார்

**சென்னை, செப்.7–**

**தேசிய கண் தான தினத்தையொட்டி முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கண்தானம் செய்துள்ளார்.**

கண் தானம் செய்ததற்கான பத்திரத்தில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கையெழுத்திட்டார்.

இதற்கான சான்றிதழை முதலமைச்சரிடம் சுகாதார துறை செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் வழங்கினார்.

கண்தானத்தை ஊக்குவிக்கும் வகையில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தனது கண்களை தானம் செய்வதாக அறிவித்திருக்கிறார்.



முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இன்று (7–ந் தேதி) தலைமைச் செயலகத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் கண்தானம் செய்ய விரும்புவோர்களுக்கு உதவிடும் வகையில், தமிழ்நாடு மாநில நலவாழ்வு குழுமத்தால் உருவாக்கப்பட்ட *www.hmis.tn.gov.in/eye–donor* என்ற இணையதளத்தை துவக்கி வைத்தார்.

நமது நாட்டில் சுமார் 68 லட்சம் நபர்கள் கருவிழி பாதிப்பினால் பார்வை இழந்துள்ளனர். அதில் பெரும்பான்மையானவர்கள் குழந்தைகளும், இளைஞர்களும் ஆவார்கள். தற்போது உள்ள மருத்துவ தொழில்நுட்ப முன்னேற்றத்தின் காரணமாக ஒரு நபரிடம் தானமாக பெறப்படும் இரு கண்கள், எளிய கருவிழி மாற்று அறுவை சிகிச்சை மூலம் இரு நபர்கள் கண்பார்வை பெற்று பயனடைவதுடன், கூடுதலாக கண்களின் பிற பாகங்களும் தேவைக்கேற்ப கண் பார்வை பாதிக்கப்பட்டவர்களின் சிகிச்சைக்கும் பயன்படுத்தப்படுகிறது.

### புதிய இணையதளம்

பொதுவாக கண்தானம் செய்ய விரும்புவோர் யாரிடம் உறுதிமொழி கொடுப்பது, இறந்தபிறகு எவ்வாறு, எங்கு, எப்படி கண்களை தானமாக கொடுப்பது என்ற விவரங்கள் குறித்து தெளிவில்லாமல் இருப்பதால், அது குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், தமிழ்நாட்டில் கண்தானம் செய்ய விரும்புவோர் குறித்த பதிவேட்டினை ஏற்படுத்தும் வகையிலும் *www.hmis.tn.gov.in/eye–donor* என்ற இந்த புதிய இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இணையதளம் மூலம், கண்தானம் செய்ய விரும்புவோர், தங்களது பெயர், இருப்பிட முகவரி, கைப்பேசி எண், மின்னஞ்சல் முகவரி போன்ற தகவல்களை பதிவு செய்து, கண் தானத்திற்கான உறுதிமொழியினை ஏற்ற பின்பு, அதற்கான சான்றிதழை நேரடியாக இணையதளத்தின் வாயிலாகவே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேலும், சான்றிதழை பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம். இப்பதிவின் மூலம், கொடையாளர்களிடமிருந்து மருத்துவக் குழுவினரால் பெறப்படும் கண்கள், உரிய காலத்தில் கண் வங்கியில் சேர்த்திட மிகவும் உதவியாக இருக்கும்.

### கண் தானம்

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இன்று தனது கண்களை தானமாக வழங்குவதற்கான உறுதிமொழியினை அளித்ததை தொடர்ந்து, அதற்கான சான்றிதழை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் க.சண்முகம், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், மருத்துவக் கல்வி இயக்குநர் நாராயணபாபு, மாநில நலவாழ்வு குழும இயக்குநர் கே.செந்தில் ராஜ், தமிழ்நாடு மாநில கண்பார்வையிழப்பு தடுப்பு சங்கத்தின் திட்ட இயக்குநர் டாக்டர் எஸ்.வி.சந்திரகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## உடுமலை சங்கர் கொலை வழக்கில் மேல்முறையீடு: உச்சநீதிமன்றம் ஏற்பு

டெல்லி, செப். 7

உடுமலை சங்கர் கொலை வழக்கில், தமிழக அரசு மற்றும் கவுசல்யாவின் மேல்முறையீட்டு மனுவை உச்சநீதிமன்றம் இன்று ஏற்றுக்கொண்டுள்ளது.

தமிழகத்தையே பெரும் பரபரப்பை ஏற்படுத்திய உடுமலை சங்கர் கொலை வழக்கில், உச்ச நீதிமன்றம் இன்று புதிய உத்தரவு பிறப்பித்துள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

சமீபத்தில் இந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிமன்றம் கௌசல்யாவின் தந்தை சின்னச்சாமி உள்பட 10 பேர்களை விடுதலை செய்வதாக அறிவித்தது. இதுகுறித்து தமிழக அரசு, கவுசல்யா மற்றும் சங்கரின் சகோதரர் விக்னேஸ்வரன் ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர்.

இந்த மேல்முறையீட்டு மனு இன்று விசாரணைக்கு வந்தது. இன்றைய விசாரணையின் போது தமிழக அரசு, சங்கரின் சகோதரர் விக்னேஸ்வரன் மற்றும் கவுசல்யாவின் மேல்முறையீட்டு மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக் கொள்வதாக அறிவித்தது.

மேலும் இந்த மனுக்கள் மீது பதிலளிக்க கவுசல்யாவின் தந்தை சின்னச்சாமி உள்பட 10 எதிர் மனுதாரர்களுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவால் இந்த வழக்கு அடுத்த கட்டத்திற்கு நகர இருப்பதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.


TAKE® Enabling Business Efficiencies

**டேக் சொல்யூஷன்ஸ் லிமிடெட்**

பதிவு அலுவலகம் : எண். 27, டேங்க் பண்ட் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034, தமிழ்நாடு. CIN: L63090TN2000PLC046338 இணையதளம் : www.takesolutions.com

**அறிவிப்பு**

செபி விதிமுறை 29 மற்றும் 47 (பட்டியல் பொறுப்பு மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிகள் 2015ன் படி, 30 ஜூன் 2020 அன்று முடிந்த முதல் காலாண்டிற்கான, தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளிப்பதற்காகவும் மற்றும் இதர விஷயங்களை பரிசீலிக்கவும், கம்பெனியின் இயக்குநர் குழுக்கூட்டம், திங்கட்கிழமை, 14 செப்டம்பர் 2020 அன்று வீடியோ கான்ஃபெரன்சிங் ("VC")/இதர ஆடியோ–விஷுவல் முறைகள் ("OAVM") மூலமாக நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவல் www.takesolutions.com என்ற கம்பெனியின் இணையதளத்திலும் மற்றும் www.bseindia.com மற்றும் www.nseindia.com என்ற பங்கு வர்த்தக இணையதளங்களிலும் கிடைக்கப் பெறும்.

டேக் சொல்யூஷன்ஸ் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
அவனீஷ் சிங்
நிறுவனச் செயலர்

இடம் : சென்னை
தேதி : செப்டம்பர் 07, 2020



ESSAR

**எஸ்ஸார் செக்யூரிடீஸ் லிமிடெட்**

**பதிவு அலுவலகம்:** எஸ்ஸார் ஹவுஸ், 11, கே.கே. மார்க், மகாலட்சுமி, மும்பை – 400 034. **CIN**: L65990TN2005PLC071791

Tel.: +91 22 6660 Fax: 91 22 2354 4789

**Email id:** eslinvestors@essar.com • **Website**: www.essar.com

**அறிவிப்பு**

செக்யூரிடீஸ் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015ன் கட்டுப்பாடு 29 மற்றும் கட்டுப்பாடு 47ன்படி, நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள இதர அலுவல்களுக்கு இடையே, 30 ஜூன், 2020ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளிக்க கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் திங்கள் கிழமை, செப்டம்பர் 14, 2020 அன்று எஸ்ஸார் ஹவுஸ், 11, கே.கே. மார்க், மகாலட்சுமி, மும்பை–400 034ல், நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்சொன்ன அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் www.essar.com மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சின் இணையதளம் www.bseindia.comல் உள்ளது.

**எஸ்ஸார் செக்யூரிடீஸ் லிமிடெட்டுக்காக**
ஒப்பம்/– **சோமஷேஹர் பி மலகி**
**இயக்குநர்**
(DIN: 07626139)

**தேதி:** செப்டம்பர் 5, 2020
**இடம்:** மும்பை



**சாயாஜி ஹோட்டல்ஸ் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: F1 C2, சிவவேல் அபார்ட்மெண்ட், 2 அழகப்பா நகர், ஜமீன் பல்லாவரம், சென்னை தமிழ்நாடு – 600 117

Email: cs@sayajigroup.com, Website: www.sayajihotels.com

**CIN:L51100TN1982PLC124332**

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ், எண். 03/2020-2021ன் படி இதர அலுவல்களுக்கு இடையே 30 ஜூன் 2020ல் முடிந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளிக்க கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டம் 15 செப்டம்பர், 2020 அன்று இந்தூரில் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேலும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 47(3)ன் கீழ் கூட்டம் குறித்த கூடுதல் விவரங்கள் கம்பெனியின் இணையதளம் மற்றும் கம்பெனியின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள கீழ்க்கண்ட ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதள பக்கத்தில் கிடைக்கும்.

கம்பெனியின் இணையதளம் : http://www.sayajihotels.com/investor/

ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளம்: :http://www.bseindia.com/corporates/ann.html?scrip=523710

சாயாஜி ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
இடம்: **சென்னை** ஒப்பம்/– **அமித் சர்ராப்**
தேதி: 07.09.2020 கம்பெனி செயலாளர்


### ஊரக வளர்ச்சித் துறையில்

# ரூ.7.54 கோடி கட்டிடங்கள், பாலங்கள்: எடப்பாடி பழனிசாமி திறந்தார்

சென்னை, செப். 7

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இன்று (7–ந் தேதி) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில், தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில், 6 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாகக் கட்டடத்தை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார். மேலும், பெரம்பலூர் மாவட்டத்தில் 1 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 பாலங்களையும் திறந்து வைத்தார்.

மாவட்ட அளவில் கிராமங்களுக்குத் தேவையான அனைத்து வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்தும் அலகாகவும், ஒன்றிய அளவில் உள்ள அலுவலர்களுக்கு பயிற்சி அளிப்பது, ஆய்வுக் கூட்டங்கள் நடத்துவது போன்ற பணிகளை மேற்கொள்ளும் அலுவலகமாகவும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை விளங்குகிறது. தமிழ்நாட்டில் பெரும்பாலான மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகங்கள் போதிய இடவசதி இல்லாமல் சிறிய கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

அதனைக் கருத்தில் கொண்டு, 2017–18–ம் ஆண்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மானியக் கோரிக்கையில், ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் மாவட்ட அளவிலான பல்வேறு அலுவலகங்களை ஒருங்கிணைத்து, தேனி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகம் கட்டப்படும் என்று தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் 28,716 சதுர அடி கட்டட பரப்பளவில், தரை மற்றும் முதல் தளத்துடன் 6 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகக் கட்டடத்தை முதலமைச்சர் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்.

மேலும், பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில், மண்ணச்சநல்லூர், எதுமலை, எலந்தலப்பட்டி – கண்ணப்பாடி சாலையில் 57 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம் மற்றும் அடைக்கம்பட்டி – நாகலாபுரம் சாலையில் 77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

என மொத்தம் 7 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் கட்டப்பட்டுள்ள கட்டடம் மற்றும் 2 பாலங்களை முதலமைச்சர் இன்று திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, தலைமைச் செயலாளர் க. சண்முகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ஹன்ஸ் ராஜ் வர்மா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர் டாக்டர் கே.எஸ்.பழனிசாமி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தை இலவசமாக ஆஸ்திரேலியா வழங்கும்

சிட்னி, செப். 7

தடுப்புமருந்துகளின்பயன்பாட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டால், 2021ஆம் ஆண்டில் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தை இலவசமாக வழங்கக்கூடிய இரு ஒப்பந்தங்கள் ஏற்பட்டுள்ளதாக ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மாரிசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மாரிசன் கூறும்போது,

இரண்டு நம்பிக்கை தரும் சோதனை முயற்சிகள் வெற்றி பெற்றால் 85 மில்லியன் டோஸ் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்துகளைப் பெற இயலும். ஆஸ்திரேலியாவின் 25 மில்லியன் மக்கள் ஜனவரி மாதத்தில் இந்த தடுப்பு மருந்துகளைப் பெறுவர். ஆனால் அதற்கான உறுதி அளிக்க முடியாது.

இருப்பினும் நமது மருத்துவ நிபுணர்கள் அந்த தடுப்பு மருந்துக்கு அனுமதி வழங்கினால் ஆஸ்திரேலியா முதல் இடத்தில் இருக்கும் என மாரிசன் தெரிவித்துள்ளார்.

குவின்ஸ்லாந்து பல்கலைக்கழக தடுப்பு மருந்து முதல் கட்ட மருத்துவ பரிசோதனையில் உள்ளது. சிறு குழுக்கள் மீது அந்த தடுப்பு மருந்து சோதனை நடைபெற்று வருகிறது. 95 சதவீத தடுப்பு மருந்து விகிதத்தை இலக்காகக் கொண்டுள்ளது ஆஸ்திரேலியா.

மேலும் தங்கள் நாட்டிற்கு மட்டுமல்லாமல் தங்களின் அண்டை பகுதிகளான பசிபிக் மற்றும் தென் கிழக்கு ஆசியாவிற்கும் தடுப்பு மருந்து கிடைப்பதை உறுதி செய்யும் என மாரிசன் தெரிவித்துள்ளார்.


**விழுப்புரம் மோட்டார் வாகன சிறப்பு நீதிமன்றம்– 1**
**M.C.O.P.No.532/2014**

விழுப்புரம், நெ.16,
சந்தானகோபாலபுரத்தில் வசிக்கும்
மணவாளன் மனைவி சாந்தி
மனுதாரர்

எதிர்

கடலூர், குறிஞ்சிப்பாடி, காந்தி நகர், அன்னை தெரசா தெரு, நெ.320
தில்லை நகரில் வசிக்கும்
சின்னத்தம்பி குமாரர்
மணவாளன்
எதிர்மனுதாரர்

மேற்படி வழக்கில் 3ம் எதிர்மனுதாரருக்கு தெரிவிப்பதாவது மேற்படி வழக்கில் மனுதாரர் வாகன விபத்தில் காயமடைந்ததால் நஷ்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கில் தங்களது ஆட்சேபணையை தெரிவிக்க 08.09.2020 அன்று வைக்கப்பட்டுள்ளது. தங்களுக்கு ஆட்சேபணை இருந்தால் தாங்கள் மேற்படி தேதியில் மேற்படி நீதிமன்றத்தில் காலை 10 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி தெரிவிக்க வேண்டியது. தவறினால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டு வழக்கு மேல் நடத்தப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

T. பிரபாகரன்
G. பரமசிவம்
J. இளங்கோவன்
வழக்கறிஞர்கள்



**ரவி குமார் டிஸ்டிரில்லரிஸ் லிமிடெட்**

CIN: L51909PY1993PLC008493
பதிவு அலுவலகம்: சி–9, சி–10, இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், 2வது பிரதான சாலை, தட்டாஞ்சாவடி, புதுச்சேரி 605 009.

**அறிவிப்பு**

**செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 29 மற்றும் 47ன்படி**

30 ஜூன் 2020ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கையாகாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து பதிவு செய்ய கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் சனிக்கிழமை, 12 செப்டம்பர் 2020அன்று நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

திருத்தப்பட்ட செபி (உள்வர்த்தக தடை) விதிகள் 2015ன் விதிகள் மற்றும் 30 ஜூன் 2020 தேதியிட்ட எங்களது கடித தொடர்ச்சியாக, 1 ஜூலை 2020 முதல் 30 ஜூன் 2020ல் முடிந்த காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளை அறிவித்த பின்னர் 48 மணி நேரம் முடியும் வரை நியமிக்கப்பட்ட நபர்களுக்கு வர்த்தக சாளரம் மூடப்பட் டிருக்கும்.

கம்பெனியின் இணையதளம் www.ravikumardistilleries.comல் முதலீட்டாளர் பிரிவு மற்றும் என்எஸ்இ மற்றும் பிஎஸ்இ இணையதளங்களின் கார்ப்பரேட் அறிவிப்பு பிரிவில் இந்த அறிவிப்பு உள்ளது.

ரவி குமார் டிஸ்டிரில்லரிஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/– பத்ரிநாத் எஸ் காந்தி
இடம்: புதுச்சேரி செயல் இயக்குனர்
தேதி: 05.09.2020 DIN: 01960087



**POST OFFER PUBLIC ANNOUNCEMENT TO THE SHAREHOLDERS OF UNDER REGULATION 18(12) OF SEBI (SUBSTANTIAL ACQUISITION OF SHARES AND TAKEOVERS) REGULATIONS, 2011 AS AMENDED OF**

**FIRST FINANCIAL SERVICES LIMITED**

Registered Office: 52, F-3, 1st Floor, Diamond Block, Gandhi Main Road, Sri Krishna Vatika Appt, Puzhal, Thiruvallur, Chennai-600066, Tamil Nadu, India.Tel no.: +91 9176898788, Email: firstfinancialserviceslimited@gmail.com, Website: www.ffslonline.com,

**CIN: L85100TN1984PLC011231**

The details subsequent to the completion of the Offer made vide Public Announcement ("**PA**") dated January 29, 2020, Corrigendum to PA dated July 18, 2020 and Letter of Offer dated July 18, 2020 is being issued by Capital Square Services Private Limited ("**Manager to the Offer**") in terms of SEBI (Substantial Acquisition of Shares & Takeovers) Regulations, 1997 ("**Regulations**") and subsequent amendments thereto on behalf of Mr. Bhagwati Prasad Jhunjhunwala **("Acquirer 1")**, Mrs. Mala Jhunjhunwala **("Acquirer 2")** & Ms. RuhiJhunjhunwala **("Acquirer 3")** (hereinafter collectively referred to as the"**Acquirers**") & Skyed Network Private Limited **("PAC 1")**, Anurodh Merchandise Private Limited **("PAC 2"),** Radhasoami Resources Private Limited **("PAC 3")**, BPJ Holding Private Limited **("PAC 4")** & Nandlal Vyapaar Private Limited **("PAC 5")** (hereinafter collectively referred to as the "**Person Actingin Concert**" or "**PAC**") to acquire 1,61,49,520 fully paid-up Equity Shares of Re.1/- each, representing 20.00% of the fully paid-up equity and voting share capital at a Price of ₹ 2.80/- Per Fully Paid Up Equity Shares **("Offer Price"**of ₹ 1.40 Per Share Plus Interest @10% per annum i.e. ₹ 1.40 Per Share shall be payable to the eligible Shareholders, who are the Shareholders as on the date of violation i.e. June 02, 2010) payable in cash are as under:

1. Name of the Target Company : **First Financial ServiceLimited**
2. Name and Address of the Acquirer(s) including Person Acting in Concert (PAC) : **Acquirers:Mr. Bhagwati Prasad Jhunjhunwala.** Flat 1D, Rajagiri Residency, 125 Rukmani Lakshmipathi Road, Rajarthinam Stadium, Egmore,Chennai-600008, Tamil Nadu, India.
   **Mrs. Mala Jhunjhunwala.** Flat 1D, Rajagiri Residency, 125 Rukmani Lakshmipathi Road, Rajarthinam Stadium, Egmore,Chennai-600008, Tamil Nadu, India.
   **Ms. RuhiJhunjhunwala.** Flat 1D, Rajagiri Residency, 125 Rukmani Lakshmipathi Road, Rajarthinam Stadium, Egmore,Chennai-600008, Tamil Nadu, India.
   **PAC:**
   **Skyed Network Private Limited** Flat 1C, Rajagiri Residency, 125 Marshalls Road, Egmore, Chennai-600008, Tamil Nadu, India.
   **Anurodh Merchandise Private Limited** 9, Weston Street, 3rd Floor Unit No 318 Kolkata,West Bengal-700013, India.
   **Radhasoami Resources Private Limited** JJ Manor, 2nd Floor, 146, Rukmani Lakshmipathi Road, Egmore, Chennai-600 008, Tamil Nadu, India.
   **BPJ Holding Private Limited** Flat No.9, 4th Floor, Sri Chakra Apartments, Door No.9, Poes Road, Ist Street, Teynampet, Chennai – 600 018,India.
   **NandlalVyapaar Private Limited**No.2, Garstin Place, Hare Street, Kolkata, West Bengal – 700 001, India.
3. Name of Manager to the Offer : **CapitalSquare Advisors Private Limited**
4. Name of Registrar to the Offer : **Bigshare Services Private Limited**
5. Offer details
   a) Date of Opening of the Offer : **Thursday, 23.07.2020**
   b) Date of Closing of the Offer : **Tuesday, 11.08.2020**
6. Details of the acquisition:

| Sr. No. | Particulars | Proposed in the Offer Document | | Actual | |
|---|---|---|---|---|---|
| 1. | Offer Price (including interest @ 10% per annum per Equity Share for delay i.e. ₹ 1.40 per share). | Rs.2.80/- per share | | Rs.2.80/- per share | |
| 2. | Shareholding of Acquirers& PAC (No. & %) before MOU/P.A. | NIL | | NIL | |
| 3. | Shares acquired by way of MOU or market purchases (No. & %) | NIL | | NIL | |
| 4. | Shares acquired in the Open Offer (No. & %) | 1,61,49,520 (20.00%) | | 400 | |
| 5. | Size of the Open Offer (No. of shares multiplied by Offer Price per share) | Rs.4,52,18,656/- | | Rs. 1,120/- | |
| 6. | Shares Acquired after P.A. but before 7 working days prior to closure date, if any. (No. & %) | Nil | | Nil | |
| 7. | Post Offer shareholding of Acquirers& PAC(No. & %) (2+3+4+6) | 1,61,49,520 (20.00%) | | 400 (0.0004%) | |
| 8. | Pre and Post Offer shareholding of Public Shareholders (No. & %) | **Pre Offer** | **Post Offer** | **Pre Offer** | **Post Offer** |
| | | 8,07,47,600 (100.00%) | 8,07,47,600 (100.00%) | 8,07,47,600 (100.00%) | 8,07,47,200 (99.9996%) |

7. Status of the Escrow Account, whether released or not : The amount lying in Escrow Account will be released to the Acquirers in accordance with SEBI (SAST) Regulation, 1997.
8. Payment of interest, if any, to the shareholders along with the details thereof. : Interest @ 10% Per Annum per equity Share.
9. Status of Investor Complaints received, if any. : Nil

The Acquirers and PAC, their directors accept full responsibility for the information contained in this Post OfferPublic Announcement and also for their obligations as laid down in the Regulations.

This Public Announcement will also be available on SEBI website at www.sebi.gov.in

Issued by Manager to the Offer on behalf of the Acquirers & PAC:

CAPITALSQUARE® Teaming together to create value

Manager to the Offer:
**MANAGER TO THE OFFER:**
**CAPITALSQUARE ADVISORS PRIVATE LIMITED**
208, 2nd Floor, AARPEE Centre, MIDC Road No 11, CTS 70, Andheri (E), Mumbai 400093, Maharashtra, India.
**Tel:** +91-22-66849999
**Fax:** +91-22-66849998
**Website:** www.capitalsquare.in
**Email Id:** tanmoy.banerjee@capitalsquare.in
**Contact Person:** Mr. Tanmoy Banerjee
**SEBI Registration No:** INM000012219

**Place : Mumbai**
**Date : 05.09.2020**